1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. பேரவையில் எந்தெந்த விஷயங்களை எவ்வெப்பொழுது எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்திருக்கிறோம். அந்த முடிவின்படியே செய்து கொள்ளலாம்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டத்தில் கம்பளிப் பூச்சிகளின் தொல்லையால் நிலக்கடலைப் பயிர் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள், மதுரை மாவட்டத்தில் கம்பளிப்பூச்சிகளின் தொல்லையால் நிலக் கடலைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட விஷயமாதலால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்.

4. விளக்க உரை.

பொறியியல் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து கல்வி—சுகாதார அமைச்சரின் விளக்க உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் மாணவர் பிரதிநிதிகள் நேற்று என்னைச் சந்தித்து பொறியியல் கல்லூரி மாணவர்களின் மனத்தை அலைக்கழித்துவரும் சில சிக்கல்களைப் பற்றியும், அதன் விளைவாக அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைபற்றியும் என்னிடம் மனம் விட்டுப் பேசினர். நடைமுறையில் உள்ள தொழில் நிலைகளுக்கேற்ப தங்களைத் தகுதிப்படுத்துகின்ற செய்முறைப் பயிற்சி இல்லாததன் காரணமாக பட்டம் பெற்ற பிறகு தங்களுடைய தகுதிக்குரிய வேலைகளைப் பெறுவதில் பெரும்பான்மையான பொறியியல் பட்டதாரிகள் இடர்ப்படுகின்றனர் என்ற அவர்களின் கவலையை மாணவர் தெரிவித்தனர். எனவே, ஓராண்டுக் கால அளவிற்கு மாணவர்கள் அனைவருக்கும் தகுந்த படிப்பு உதவித் தொகையுடன் விருப்ப அடிப்படையில் செய்முறைப் பயிற்சி அளிக்க வகை செய்யும் ஒரு திட்டத்தை அரசு வகுக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்காக செய்முறைப் பயிற்சியினை வரையறுத்த அளவில் அளிப்பதற்கான முயற்சி இந்திய அரசின் கல்வி அமைச்சினால் ஏற்கப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது என்று மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பெருமளவு பட்டதாரிகளுக்கு

இத் திட்டம் பயன்படும் வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகள் இந்திய அரசுடன் முழுமையாக ஆலோசிக்கப் படும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றம் பொறியாளர் களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்பது என்னுடைய திண்ணமான நம்பிக்கையாகும். தொழில் நுட்ப மாணவர்களின் தற்போதைய ஏக்கம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அப்போது குறையும். அடுத்த திங்கள் சில கழிந்த பின்னர் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்த பணிகள் தொடங்கப்படும். நாட்டின் பொருளாதார நிலை சீரடைந்து வருவதையும் அதனை அடுத்து பொறியாளர்களுக்கான வேலை வாய்ப்புகள் பெருகி வருவதற்கான அறிகுறிகள் ஏற்கெனவே காணப்படுகின்றன.

பொறியியல் பாட முறையில் கால அளவு, அதற்கு உண்டாகும் செலவு, பொறியாளர்களுக்குத் தரப்படும் பயிற்சி அளவு ஆகியவற்றுக்கு நிகராக அரசுப் பணியில் பொருத்தமான சம்பள உயர்வுடன் அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவிகளில் பொறியாளர் களுக்கு முதல் நியமனம், அளிக்கப்பட வேண்டும் என்றும் மாணவர்கள் முறையீடு செய்து கொண்டனர். அரசுப் பணியாளர் அனைவருக்குமான சம்பளங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கென சம்பள ஆய்வுக் குழு ஒன்றை அரசு அண்மையில் நியமித்துள்ளது. அவர்கள் தங்களது பரிவுரைகளைச் செய்யும்போது, மாணவர்களின் இந்தக் கோரிக்கையை முறையாக ஆலோசிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. பொறியியல் பட்டதாரிகளுக்கு அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவிகள் வழங்கப்படுவதைப் பொறுத்தவரையில், அது குறித்து பல்வேறு கூறுகளை ஆய்வு செய்து விரைவில் முடிவு எடுக்கும்படி அரசின் பொருத்தமான துறைகள் கேட்கப் படுகின்றன. அரசினால் வேலைக்கு அமர்த்தப்படும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவியைத் தருவது குறித்து சம்பள ஆய்வுக் குழு பரிவுடன் பரிசீலனை செய்யுமென்று நான் மாணவர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

அரசிடமிருந்து கடன் பெற்றுப் படித்து வரும் பல மாணவர்கள் தாங்கள் ஒரு வேலையைப் பெறும் தேதி அல்லது பட்டம் பெறும் நாளிலிருந்து ஓர் ஆண்டு இவற்றில் எது முன்னதாக யிருக்கிறதோ அதிலிருந்து தொடங்கி கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கப்படுவதாகவும் பல மாணவர்கள் முறையீடு செய்து கொண்டார்கள். வேலையில்லாமல் உள்ள பட்டதாரிகளைப் பொறுத்த வரையில், இது குறித்து சில இடர்ப்பாடுகள் நேர்ந்துள்ளன. பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும் வரையில் கடனைத் திருப்பிச் செலுத்துவது தள்ளிப் போடப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அரசு அவர்களுடைய வேண்டுகோளினைப் பரிவுடன் கவனிக்கிறது. மேலும், பாதிக்கப் பட்ட மாணவர்களிடமிருந்து வரும் தனிப்பட்ட முறையீடுகள் குறித்து அரசு பரிவுடன் ஆய்வு செய்யும். பொறியியல்

1969 செப்டம்பர் 11] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பட்டதாரிகள் பட்டம் பெற்ற உடனே அவர்களுக்கு ஏற்ற பணிகள் கிட்டுவது கடினமாக இருப்பதால் பொறியியல் பாட முறைகளில் முதலாண்டு மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவு குறைப்பதால் பயன் விளையுமென்பதையும் மாணவர்கள் செப்பினர். இச் சிக்கலை அரசு ஏற்கெனவே நன்கு அறிந்துள்ளது. கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் மாணவர்களின் எண்ணிக்கையை முறையே 200, 100 ஆகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுபோன்ற செயல்களில் 5 ஆண்டுகளுக்குப் பிறகு வேலை வாய்ப்பு நிலைமை எவ்வாறு இருக்குமென்பதை முன்கூட்டி நாம் எண்ணிப் பார்க்க இயலாது. பொருளாதார நிலை சீர்பெறும்போது, வேலை வாய்ப்புகள் ஏராளமாக இருக்கும். அப்பொழுது பயிற்சி பெற்ற பொறியாளர்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை நிகழாவண்ணம் நாம் பையவே செல்ல வேண்டியுள்ளது. மேலும் பொறியாளர்கள் தனிப்பட்ட முறையில் சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான வாய்ப்பு கட்டாயம் அதிகமாகும்.

கல்லூரிப் படிப்பை முடித்து வெளிவரும் மாணவர்கள் நீண்ட காலம் வேலைக்காக காத்திருக்கும் நிலை ஏற்படாவண்ணம் அரசு ஆவன செய்யுமென்று மாணவர்களுக்கு உறுதியளிக்க விழைகிறேன். எனவே மாணவர்கள் அனைவரும் வகுப்புகளுக்குச் செல்லுமாறும் இயன்ற விரைவில் தங்களது படிப்பை முடித்துக் கொள்ளுமாறும் அவர்களை நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்பு அல்லது ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிக்கை கொடுத்திருக்கும்போது அதே பொருள் குறித்து அமைச்சர் 82-வது விதியின் கீழ் விளக்க உரை அளித்தது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of order. It is not with regard to the statement just made by the Hon. Minister.

I wish to point out a matter of very great importance. Normally whenever we give notice of an adjournment motion or a call attention notice under rule 41, the practice of the Ministry is to come forward with some statement under rule 82. This is being done regularly and if this is going to be followed to an increased and greater extent, hon. Members will completely lose their fundamental right of expressing their grievances. We are here to represent our constituencies and the grievances of the people in our constituencies. But invariably it happens that whenever we give notice of an adjournment motion or a call attention notice—I am not accusing the Government that they are wilfully doing it—the Ministry comes forward with a statement under Rule 82 of the Assembly Rules. If this is going to happen in future also what is the freedom or right that the Hon. Members can exercise in regard to these matters? So, I request the Hon. Speaker to see that this practice is not followed by the Ministry in future.